From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 201/10

Deposition of witness for: PW - 3

| | | | |
|---|---|---|---|
| Name | : **முன்னமலை** | Father/Husband Name | : **மலைச்சாமி** |
| Age | : | Calling | : |
| Date | : 28.05.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the day of 28.05.2025.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

அரசுதரப்பில் முதல்விசாரணை

நான் வெள்ளரிப்பட்டியில் குடியிருந்துகொண்டு, சுமார் 25 வருடங்களாக டீ கடை நடத்தி வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். நான் கையொப்பத்தை எனது கடை முன்பாக வைத்து போட்டுகொடுத்தேன். வழக்கு வாகன விபத்து என தெரிந்துகொண்டேன். என்னுடன் சேர்ந்து சாட்சி முத்துமாலை சாட்சி கையொப்பம் செய்துள்ளார். ( **அந்த இரண்டாவது சாட்சி கையொப்பம் அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) இதுசம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு **317** ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

என்னிடம் காட்டப்படும் சாட்சி சம்மனில் உள்ள கையொப்பம் போல்தான் எப்பொழுதும் கையொப்பம் இடுவேன் என்றால் சரிதான். எனது டீ கடையின் பெயர் என்ன என்றால் ஐயப்பன் டீ ஸ்டால். நான் சாட்சி கையொப்பம் எனது ஐயப்பன் டீ ஸ்டாலில் வைத்து போடப்பட்டது என்றால்

சரிதான். நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் போலீசாரால் என்ன எழுதப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. என்னுடன் சாட்சி கையொப்பம் செய்த முத்துமாலை எங்கு வைத்து எப்போது கையொப்பம் செய்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.